CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්ව නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org

# ஊடக செய்தி அறிக்கை 2

*செப்டெம்பர் 20, 2014, கொழும்பு, இலங்கை:* ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்களிப்பு பி.ப 4 மணிக்கு முடிவடைந்தது. வாக்களிப்பு காலத்தின் போது அறிவிக்கப்பட்ட மேலும் சம்பவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பண்டாரவளை வாக்களிப்பு பிரிவு.** ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததின்படி, ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களின் ஒரு குழு தியத்தலாவையிலிருந்து பண்டாரவளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கையில், அவர்களது பாதையை மறித்த ஒரு வெள்ளை வானிலிருந்து ஒரு குழுவினர் இறங்கி தாக்குதல் நடாத்தியது. ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர், திரு.ஹரின் பெர்ணான்டோவின் ஒருங்கிணைப்புச் செயலாளரான திரு. பிரேமசிறி என்பவர் தென் மாகாண சபை அமைச்சர் டி.வி. உபுலினால் ஒரு கத்தியின் மழுங்கிய பக்கத்தை உபயோகித்து தாக்கப்பட்டார். தாக்குதலை மேற்கொண்டவர்கள் ஆகாயம் நோக்கி பல தடவைகள் துப்பாக்கி பிரயோகம் செய்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்தனர்.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், வெல்லவாயா, எத்திலிவெவ மகா வித்தியாலயம்.** விருப்பிலக்கம் 17 இன் கீழ் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரோய் காலிங்க, தனது ஆதரவாளர்கள் சுமார் 25 பேர்களுடன் சென்று, ஒரு ஐ.ம.சு.கூ ஆதரவாளரை, அவரது வாக்கை அளிக்க கூடாது என அச்சுறுத்தியதாக, ஐ.ம.சு.கூ மொனராகலை தேர்தல் செயற்பாட்டு பிரிவு தேர்தல் வன்முறைகளைக் கண்கானிக்கும் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தது. இந்த முறைப்பாட்டை பொலிஸ் ஏற்றுக்கொள்வதற்கு மறுத்துவிட்டதாகவும் ஐ.ம.சு.கூ குற்றஞ் சாட்டியது. எவ்வாறாயினும், தே.வ.க.நி இனால் தொடர்பு கொள்ளப்பட்ட போது, முறைப்பாடானது காலை 9.15 அளவில் முறைப்பாட்டு இலக்கம் 48 உடன் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக வெள்ளவாயா, பொலிஸ் குறிப்பிட்டது.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹாலி-எல, சென் ஜேம்ஸ் தமிழ் மகா வித்தியாலய வாக்குப்பதிவு நிலையம்.** வாக்காளர் பத்மநாதன் யோகரட்னம், தனது வாக்கைச் செலுத்துவதற்காக வந்த போது, வாக்களிப்பு நிலையத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் வைத்து கத்தியினால் குத்தித் தாக்கப்பட்டதாக தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் முறைப்பாடு செய்தனர். தாக்குதலை நடாத்தியவர், ஒரு மக்கள் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர் எனவும், தாக்கப்பட்டவரின் சகோதரனின் கூற்றுப்படி, அவர் சண்முகநாதன் என இனங் காணப் பட்டதுடன், முந்திய தினம் தாக்கப்பட்டவரோடு வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தார் எனவும் குற்றஞ் சாட்டப்பட்டது. தாக்கப்பட்டவர், பதுளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியசாலை தரப்பை விசாரித்த போது, பத்மநாதன் யோகரட்னம் என்ற பெயருடைய ஒரு நபர் வாட் இலக்கம் 8 இல் அனுமதிக்கப்பட்டதாக தே.வ.க.நி இற்கு அறியத்தரப்பட்டது. எவ்வாறாயினும், மேலும் தகவல்களை வெளியிடுவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் மறுத்து விட்டது. மேலும் தகவல்களுக்காக வைத்தியசாலைப் பணிப்பாளரைத் தொடர்பு கொள்வதற்கான தே.வ.க.நி களக் கண்காணிப்பாளரின் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இந்தச் சம்பவம், தனிப்பட்ட முரண்பாட்டினால் ஏற்பட்டதொன்று எனவும், தேர்தல் வன்முறையுடன் இது எவ்விதத்திலும் தொடர்புபட்டதல்ல எனவும், பதுளை ஆதார வைத்தியசாலையின் பொலிஸ் தே.வ.க.நி இற்கு அறிவித்தது. தே.வ.க.நி இற்கு, தாக்கப்பட்டவரின் சகோதரரால், இந்தச் சம்பவம் தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புபட்ட ஒரு சம்பவமாக அறிவிக்கப்பட்டது.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பிபிலை.** வெல்லஸ்ஸ தேசிய பாடசாலையின் எதிரில் ஐக.கிய தேசியக் கட்சியின் ஒரு கட்சி அலுவலகத்தை நிர்வகித்து வந்த எச்.ஏ. துஷ்யந்த என்பவருக்குச் சொந்தமான ஒரு ஹோட்டல், 5 வாகனங்களில் வந்த சுமார் 30 நபர்களால் அடித்து நொறுக்கப்பட்டது. தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் இவ்விடத்திற்கு விஜயம் செய்தனரென்பதுடன் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளால், ஒரு இனந் தெரியாத குழு ஹோட்டலிற்குள் புகுந்து பொருட்களை அடித்து நொறுக்கியதுடன் மேற்குறிப்பிட்டவர் உட்பட 3 நபர்களைத் தாக்கியதாகத் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு பொலிஸ் விஜயம் செய்ததை அடுத்து தாக்குதல் நடாத்தியவர்கள் தப்பியோடி விட்டதாகவும் நேரில் கண்ட சாட்சிகள் குற்றஞ்சாட்டினர்.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், பிபிலை, மொனராகலை மாரி அராவ மகா வித்தியாலய வாக்குப்பதிவு நிலையம்.** மாரி அராவ வாக்குப்பதிவு நிலையத்தில் ஐ.ம.சு.கூ ஐச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகளுக்கு உள்ளே நுழைவதற்கான அனுமதி மறுக்கப்பட்டதாக ஐ.ம.சு.கூ கட்சி மொனராகலை மாவட்ட கட்சி அலுவலக உத்தியோகத்தரால் ஒரு முறைப்பாடு பதியப்பட்டது.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹப்புத்தளை, பிடரத்மலை, பண்டாரவளை/ கனிஷ்ட தமிழ் பாடசாலை வாக்குப்பதிவு நிலையம்.** பிற்பகல் சுமார் 2 மணியளவில், திரு.அழகன் செந்தில் தொண்டமான் (இலக்கம்.02) அவர்களின் விருப்பு இலக்கம் மற்றும் ஐ.ம.சு.கூ இன் தேர்தல் சின்னத்தையும் காண்பிக்கும் ஒரு பதாகையுடன் UPVK 3519 பதிவிலக்கத்தைக் கொண்ட ஒரு முச்சக்கர வண்டி, வாக்குப் பதியும் நிலையத்திலிருந்து ஒரு 50 மீற்றர் தொலைவில், ஒரு கணிசமான நேரம் நின்றிருந்ததாக, தே.வ.க.நி களக் கண்காணிப்பாளரொருவர் அறிவித்துள்ளார். குறித்த முச்சக்கர வண்டியின் சாரதியிடம் தே.வ.க.நி இன் களக் கண்காணிப்பாளர் விசாரணைகளை மேற்கொண்ட போது, திரு.செந்தில் தொண்டமானின் ஆதரவாளர்களினால் குறித்த விளம்பர ஸ்டிக்கரைக் காட்சிப்படுத்தித் திரிவதற்கு தனக்கு தேர்தல் வரை தினமும் ரூ.1000 கொடுப்பனவு செய்யப்படுவதாகவும், தேர்தல் தினமான இன்று (செப்டெம்பர், 20) அதே ஆதரவாளர்களார், ரூ1500 கொடுப்பனவு செய்யப்படுவதாகவும் கூறினார். இதனைப் போன்ற கொடுப்பனவுகள் ஏனைய பல வாகனங்களுக்கும் அளிக்கப்பட்டதாக அந்த முச்சக்கர வண்டிச் சாரதி தெரிவித்துள்ளார்.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், வெல்லவாயா, ஒக்கம்பிட்டிய மகா வித்தியாலய வாக்குப்பதிவு நிலையம்.** திரு.சசூிந்திர ராஜபக்ஸ அவர்களின் வேட்பாளர் இலக்கம் 15 மற்றும் வெற்றிலைச் சின்னம் என்பவற்றை வெளிப்படுத்தும் பிரச்சாரப் பொருட்கள், ஒக்கம்பிட்டிய வாக்குப்பதிவு நிலையத்தைச் (நிலையம் 34/35) சுற்றி சிதறிப் போடப்பட்டிருந்ததாக (நிழற் படச் சான்றுகள் உள்ளன) தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், வெல்லவாயா, ஒக்கம்பிட்டிய மகா வித்தியாலய வாக்குப்பதிவு நிலையம்.** இலக்கம் 9 ஐ நீலப் பின்னணியில், மஞ்சள் நிறத்திலும் கொண்ட ஸ்டிக்கரைத் தாங்கிய வண்ணம் WPKH-3434 எனும் பதிவிலக்கம் கொண்ட ஒரு வாகனம், வாக்குப் பதிவு நிலையத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக (நிழற்படச் சான்று உள்ளது) தே.வ.க.நி இன் களக் கண்காணிப்பாளர் அறிவிக்கிறார்.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹாலி-எல, மாவட்டத் தொழிற் பயிற்சி மத்திய நிலையம், ரொக்ஹில் வாக்குப்பதிவு நிலையம்.** வாக்குப் பதிவு நிலையத்தை அண்மித்த நிலப் பகுதியில் இலக்கங்கள் 17, 09 மற்றும் 07 ஆகியோரது பிரச்சாரப் பொருட்களைக் கண்டெடுத்ததாக தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மேற்குறித்த இலக்கங்கள் முறையே ஐ.ம.சு.கூ இன் வேட்பாளர்களான மானெல் ரத்நாயக்க, ஆர்.எம். நிமால் ரத்நாயக்க மற்றும் ஆர்தர் சாமர சம்பத் தசநாயக்க தொன் ஆகியோர்களுக்கானதாகும்.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹாலி-எல, வேவெல்ஹின்ன வித்தியாலய வாக்குப் பதிவு நிலையம்.** வாக்குப் பதிவு நிலையத்திலிருந்து 100 மீற்றர் சுற்றுக்குள் உள்ள வாக்காளர்களுடன் சுமார் 5 இளைஞர்கள் பேசிக் கொண்டிருந்ததையும், அவர்கள் இலக்கம் 3 இன் கீழ் போட்டியிடும் ஐ.ம.சு.கூ வேட்பாளர் திரு.அஜித் தேஷப்பிரியவுக்கு வாக்களிக்கும்படி அவர்களுக்கு கூறிக் கொண்டிருந்ததாக தே.வ.க.நி களக் கண்காணிப்பாளர்கள் முறையிடுகின்றனர்.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், பிபிலை நாகல, மொனராகலை நாகல பியரத்ன கனிஸ்ட வித்தியாலயம்.** சிரேஷ்ட தெரிவத்தாட்சி அதிகாரி, மாற்றுவலுக் கொண்டவர்கள் தங்களது வாக்குகளை அளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என அறிவித்ததாக ஐ.ம.சு.கூ கட்சி அலுவலகத்தினால் ஒரு முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது. ஐ.ம.சு.கூ கட்சி அலுவலகம் இந்த விடயத்தை தேர்தல்கள் ஆணையாளருக்கும் அறிவுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், வெல்லவாயா, கிரி-இப்பன்வெவ பண்டாரநாயக்க இரண்டாம் நிலைப் பாடசாலை.** கிரி-இபான் அர மாவர பாலத்திற்கு அருகிலிருந்து, கிரி இப்பன்வெவ பண்டாரநாயக்க இரண்டாம் நிலைப்பாடசாலைக்கு வாக்காளர்களை ஏற்றி இறக்கி போக்குவரத்துச் செய்வதற்காக ஒரு நபர்கள் கூட்டம் வெள்ளை வான் ஒன்றைப் பயன்படுத்தியதாக ஐ.ம.சு.கூ கட்சி அலுவலகத்தால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது. இச் சம்பவம் கிரிஇப்பன்ஆர சாமர பாலத்திற்கு அருகில் இடம்பெற்றதாகவும், வானிலிருந்தவர்கள் சிவப்பு நிறக் கொடிகளைக் காட்டியதாகவும் அவர்கள் மேலும், குற்றம் சாட்டினர்.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், பிபிலை, மட கம, மொராகலை பிபிலமுல்ல கனிஸ்ட வித்தியாலய வாக்குப்பதிவு நிலையம்.** மாற்றுவலுக் கொண்டவர்கள் வாக்களிப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளை சிரேஷ்ட அத்தாட்சி அதிகாரி மேற்கொண்டிருக்கவில்லையென, ஐ.ம.சு.கூ கட்சி அலுவலகத்தால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

**செப்டெம்பர் 20, 2014, ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம்,சியம்பாலண்டுவ, கும்புக்கேயாய எக்சத் சமித்தி சாலாவ, அதிமலே வெவ வாக்குப்பதிவு நிலையம்.** தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கருணாமுனி (63245) வாக்காளர்களை வாக்களிக்க விடாது அறிவித்து, மிரட்டியதைக் கண்டதாக ஐ.ம.சு.கூ கட்சி அலுவலகத்தால் தே.வ.க.நி யில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

தே.வ.க.நி லையமானது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல்வன்முறைக்கு எதிரான கூட்டு என்பவற்றால் 1997 இல், தேர்தல் தொடர்பான வன்முறையைக் கண்காணிப்பதற்காக, ஓர் சுயாதீன மற்றும்கட்சிச்சார்பற்ற ஸ்தாபனமாக உருவாக்கப்பட்டது. தற்போது தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்(CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் இன்போர்ம் (INFORM) மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் ஆகிய நிறுவணங்களின் கூட்டாக சுயாதீனமாக இயங்குகிறது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக அரசியல் வன்முறைகளுக்கெதிரான கூட்டமைப்பு என்பவற்றினால் 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மணித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

**எங்களது தொடர்பு விபரங்கள்:**


தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி)
இல. 24/2, 28ஆவது ஒழுங்கை,
ஓஃப் பிளவர் வீதி,
கொழும்பு 3.
தொலைபேசி:: 0112565304-6 ரூ 0115552749
தொலைநகல்: 0114714460
மின்னஞ்சல்: cmev@cpalanka.org


கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்காக பின்வரும் நபர்களை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:


கலாநிதி.பாக்கியசோதி சரவணமுத்து
இணை அமைப்பாளர் - தே.வ.க.நி
0112301634 (நேரடி)

திரு. மஞ்சுளா கஜநாயக்க
ஒருங்கிணைப்பாளர்
0115552749/0772298565

திரு.மணிமாறன்
கள ஒருங்கிணைப்பாளர்
0115552749/077247608